**சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி**
**முன்னிலை திருமதி.எல். மகேஷ்வரி, M.L.,**
**சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி**
**2026–ம் ஆண்டு ஜீலை மாதம் 16–ம் நாள் வியாழக்கிழமை**
**அமர்வு வழக்கு எண். 21/2018**

*****

(குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.II)
உசிலம்பட்டி அவர்களால்
மேல்விசாரணைக்கு அனுப்பி வைக்கப்பட்டது)
முதல்நிலை பதிவேட்டு வழக்கு எண்.10/2017

*****

| | |
|---|---|
| தமிழக அரசுக்காக | எழுமலை காவல் நிலையக் குற்ற எண்.219/2015 காவல் ஆய்வாளர் மூலமாக. |
| எதிரிகளின் பெயர் | 1. தங்கமுடி, த/பெ. சின்னக்கிழவன்<br>2. லிங்கப்பன், த/பெ. தங்கமுடி<br>3. மொக்கானை, த/பெ. தங்கமு<br>4. வெள்ளைச்சாமி, த/பெ. தங்கமுடி (இறப்பு)<br>5. மாரியப்பன், த/பெ. தங்கமுடி<br>6. குருசாமி, த/பெ. தங்கமுடி<br>7. அம்சுக்கொடி, த/பெ. காளியப்பன்<br>8. தவசம்மாள், க/பெ. அம்சுக்கொடி<br>9. விஜயலட்சுமி, க/பெ வெள்ளைச்சாமி (இறப்பு)<br>10. செல்வி, க/பெ. மொக்காணை<br>11. லோகமணி, க/பெ. லிங்கப்பன் |

**எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்கள்**

| | |
|---|---|
| குற்றச்சாட்டு | எதிரிகள் இதச பிரிவுகள் 147, 148, 294(b), 342, 323, 307–ன் கீழ் |
| எதிரிகளின் பதிலுரை | குற்றவாளிகள் அல்ல |
| தீர்ப்பு | முடிவாக, 1வது எதிரி மீதான இதச பிரிவுகள் 147, 148, |

| | |
|---|---|
| | 342–ன்படியும், 2வது எதிரி மீதான இதச பிரிவுகள் 147, 148, 294(b), 342, 307–ன்படியும், 3, 5 முதல் 8 மற்றும் 10, 11 எதிரிகள் மீதான இதச பிரிவுகள் 147, 148, 342, 323–ன்படியுமான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் எவ்வித ஐயத்திற்கும் இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று தீர்மானித்து, சந்தேகத்தின் பலனை 1 முதல் 3, 5 முதல் 8 மற்றும் 10, 11 எதிரிகளுக்கு வழங்கி மேற்கண்ட பிரிவுகளின் கீழ் குற்றவாளிகள் அல்ல என தீர்மானித்து 1 முதல் 3, 5 முதல் 8 மற்றும் 10, 11 எதிரிகளைக் கு.வி.மு.ச.பிரிவு 235(1)–ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்படுகிறது. |

இந்த அமர்வு வழக்கானது என் முன்பு 16.07.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்த போது அரசு தரப்பில் கற்றறிந்த அரசு வழக்குரைஞர் திரு.R. ராஜசேகர் அவர்கள் முன்னிலையாகியும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.G.K. சுந்தரம் அவர்கள் முன்னிலையாகியும் வழக்குரைஞர்களின் வாதங்களை கேட்டும், முன்னிடப்பட்ட சாட்சியங்கள், சான்றாவணங்களைப் பரிசீலனை செய்தும், இந்நாள் வரையில் என் பரிசீலனையின் கீழ் இருந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்.........

**தீர்ப்புரை**

எழுமலை காவல் ஆய்வாளர் தாக்கல் செய்த இறுதி அறிக்கையின் சுருக்கம் வருமாறு,

இவ்வழக்கின் சாட்சி 1ஆனவர் மதுரை மாவட்டம், பேரையூர் தாலுகா, சீல்நாயக்கன்பட்டி கிராமத்தில் குடியிருந்து வருகிறார். இவ்வழக்கில் காயம்பட்ட சாட்சி 2ஆனவர் சாட்சி 1ன் தந்தை ஆவார். சாட்சி 2ஆனவர் சாட்சி 2ன் மகள் ஆவார். இவ்வழக்கின் எதிரிகள் அனைவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அனைவரும் சீல்நாயக்கன்பட்டியில் குடியிருந்து வருகிறார்கள்.

இவ்வழக்கின் சாட்சி 3ன் மகள் அழகுஜோதி என்பவரை 6வது எதிரி குருசாமி என்பவர் 05.12.2015ம் தேதி காதல் திருமணம் செய்துள்ளார். இந்த திருமணத்தை எதிர்த்து சாட்சி 2ஆனவர் எதிரிகளுடன் பிரச்சனை செய்துள்ளார். மார்ஜினில் கண்ட எதிரிகள் சாட்சி 1ன் மீது விரோதம் கொண்டுள்ளார்கள்.

இந்நிலையில் சாட்சி 2ஆனவர் கடந்த 10.12.2015ம் தேதி இரவு சீல்நாயக்கன்பட்டிக்கு மேற்கே உள்ள தனது தோட்டத்திற்கு காவலுக்கு சென்றுபடுத்து துாங்கிவிட்டு மறுநாள் 11.12.2015ம் தேதி காலை சுமார் 6.00 மணிக்கு எழுந்து காலைக்கடன் கழிப்பதற்காக அருகில் உள்ள பெருமாள் மனைவி கருங்கியம்மாள் என்பவரின் விவசாயநிலத்திற்கு வடக்கே பெரும்பாதை ஓடையின் தென்புற காலை மேட்டில் நடந்து சென்று கொண்டிருந்தபோது எதிரிகள் முன்விரோதம் காரணமாக ஒன்று சேர்ந்து கையில் ஆயுதங்களுடன் வந்து சாட்சி 2யை அடித்து கை மற்றும் கால்களைப் பிடித்து அமுக்கிக்கொண்டு 1வது எதிரியானவர் சாட்சி 2ன் வாயில் துணியை வைத்து அமுக்கி சத்தம்போடவிடாமல் செய்துள்ளார். 2வது எதிரியானவர் சாட்சி 2யைப் பார்த்து தேவிடியா மகனே, அவுசாரி மகனே எங்க தம்பி குருசாமி உன் பேத்தியைக்

காதலித்து கல்யாணம் செஞ்சதால நீ எங்களோட சண்டைக்கு வருவியா அவ்வளவு பெரிய ஆளாடா நீ உயிரோடு இருந்தால் தானே எங்களோட சண்டைக்கு வருவே இதோட செத்து தொலைந்து போடா என சொல்லி கையில் வைத்திருந்த அருவாளால் சாட்சி 2ன் கழுத்தை அறுத்து கொடுங்காயத்தை ஏற்படுத்தியுள்ளார். 4வது எதிரியானவர் கையில் அருவாளை வைத்துக்கொண்டும், 3, 5 முதல் 11 வரையிலான எதிரிகள் அனைவரும் கையில் உருட்டு கட்டைகளை வைத்துக்கொண்டு சாட்சி 2யைத் தலை மற்றும் உடம்பில் மாறி மாறி அடித்தும், காலால் உதைத்தும் ஊமைக்காயத்தை ஏற்படுத்தி குற்றம் புரிந்ததாக 1வது எதிரி மீதான இதச பிரிவுகள் 147, 148, 342–ன்கீழும், 2வது எதிரி மீதான இதச பிரிவுகள் 147, 148, 294(b), 342, 307–ன்கீழும், 3, 5 முதல் 8 மற்றும் 10, 11 எதிரிகள் மீதான இதச பிரிவுகள் 147, 148, 342, 323–ன்கீழும், 4வது எதிரி மீதான இதச பிரிவுகள் 147, 148, 342 மற்றும் 324–ன்கீழும், 9வது எதிரி மீதான இதச பிரிவுகள் 147, 148, 342 மற்றும் 323–ன்கீழும் எழுமலை காவல் ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2.** மேற்கண்டவாறு இறுதி அறிக்கையானது, குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.II நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. மேற்படி நீதிமன்றத்தில் முதல் நிலைப்பதிவேட்டு வழக்காக பதிவு செய்யப்பட்டுள்ளது.

**3.** மேற்படி நீதிமன்றத்தில் எதிரிகள் ஆஜரானதும் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய இவ்வழக்கின் ஆவணங்களின் நகல்கள் யாவும் 207–ன் கீழ் வழங்கப்பட்டுள்ளது.

**4.** எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்கள் அமர்வு நீதிமன்றத்தால்

மட்டுமே விசாரிக்கப்படத்தக்கது என்பதால் அவர் மீதான வழக்கானது குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.II அவர்களால் கு.வி.மு.ச 209 பிரிவின் படி மதுரை மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு Committal செய்து உத்தரவிடப்பட்டது.

**5.** மேற்கண்டவாறு Committal செய்யப்பட்ட வழக்கானது மதுரை மாவட்ட அமர்வு நீதிபதி அவர்களால் கோப்பில் எடுக்கப்பட்டு விசாரணைக்காக இந்நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டதின் பேரில் இந்நீதிமன்றத்தில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

**6.** எதிரிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜரானதும் இருதரப்பு வாதம் கேட்கப்பட்டு வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு 1வது எதிரி மீதான இதச பிரிவுகள் 147, 148, 342–ன்கீழும், 2வது எதிரி மீதான இதச பிரிவுகள் 147, 148, 294(b), 342, 307–ன்கீழும், 3, 5 முதல் 8 மற்றும் 10, 11 எதிரிகள் மீதான இதச பிரிவுகள் 147, 148, 342, 323–ன்கீழும், 4வது எதிரி மீதான இதச பிரிவுகள் 147, 148, 342 மற்றும் 324–ன்கீழும், 9வது எதிரி மீதான இதச பிரிவுகள் 147, 148, 342 மற்றும் 323–ன்கீழும் குற்றச்சாட்டுக்கள் வனைந்து விளக்கிக் கூறி வினவிய போது எதிரிகள் குற்றவாளிகள் இல்லை என்று குற்றச்சாட்டுகளை மறுத்துரைத்தனர். பின்னர் இவ்வழக்கின் எதிரி 4 மற்றும் 9 இறந்துவிட்டபடியால் இறப்பு சான்றிதழின் அடிப்படையில் அவர்கள் மீதான வழக்கு அற்றுப்போய்விட்டதாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அதன் பின்னர் அரசு தரப்பு சாட்சிகளை விசாரிக்க உத்தரவிடப்பட்டது.

**7. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சிய சுருக்கம்:–**

**7.1.** அ.சா.1 முருகன் அவர் சாட்சியத்தில், அவர்

சீல்நாயக்கன்பட்டியில் குடியிருக்கிறார் என்றும், சுமார் 8 வருடங்களுக்கு முன்னர் தங்கள் ஊரில் உள்ள ஆற்றில் அவரது அக்கா ராஜாத்தி, அவரது அக்கா மகள் அழகுஜோதியை எதிரி தங்கமுடியின் மகன் குருசாமி காதலித்துஊரைவிட்டு கூப்பிட்டுகொண்டு சென்றுவிட்டார் என்றும், என் இவ்வாறு செய்தாய் என்று தன் அப்பா சீனி, தங்கமுடியைப் பார்த்து கேட்டார் என்றும், அதன்பின்னர் நீ உயிரோடு இருந்தால் தானே எங்களை எதிர்த்து கேள்விகேட்பாய், உன்னை இப்பொழுரே அடித்து கொலை செய்துவிடுகிறேன் என்று சொல்லி, தன் அப்பா சீனியைத் தூக்கிக்கொண்டு போய் எதிரிகள் தங்கமுடி, லிங்கப்பன், அம்சு, தவசம்மாள், குருசாமி, குருசாமி மகன் அழகுஜோதி, வெள்ளைச்சாமி, வெள்ளைச்சாமி மனைவி விஜயலெட்சுமி, மொக்கானை ஆகியோர்கள் அரிவாள் மற்றும் உருட்டுக்கம்பால் தூக்கி காயத்தை ஏற்படுத்தினார்கள் என்றும், தன் அப்பாவிற்கு கழுத்தில் அரிவாளை வைத்து வெட்டியகாயம் ஏற்பட்டிருந்தது என்றும், பின்னர் தன் அப்பாவை உசிலம்பட்டி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று, காயத்தின் தன்மையைக் கருதி மதுரை, அரசு ராசாசி மருத்துவமனைக்கு வைத்து சிகிச்சை செய்தார்கள் என்றும், அங்கு போய் என் அப்பாவைப் பார்த்தார் என்றும், போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும், தன் அப்பா மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்ததால் தான் புகார் வாக்குமூலம் போலிசாரிடம் கொடுத்தார் என்றும், தன்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் அவர் கொடுத்தது தான் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

**7.2.** அ.சா.2ஆன காயம்பட்ட நபர் சீனி அவரது சாட்சியத்தில், அவர் சீல்நாயக்கன்பட்டியில் குடியிருக்கிறார் என்றும், ஆஜர் எதிரிகளைத்

தெரியும் என்றும், சுமார் 8 ஆண்டுகளுக்கு முன்னர் தாங்கள் காட்டில் குடியிருந்தபோது காலை 6 மணி சுமாருக்கு தான் தோட்டப்பக்கம் உள்ள ஓடையில் சென்று கொண்டிருந்தார் என்றும், தான் காலைக்டன் கழித்துக்கொண்டிருக்கும் போது எதிரிகள் தன்னைத் தாக்கி தன் கழுத்தில் லிங்கப்பன், அம்சு, வெள்ளைச்சாமி ஆகியோர்கள் அரிவாளைக் கொண்டு அறுத்தார்கள் என்றும், தவசம்மாள் வாயில் துணியை வைத்து அமுக்கினார் என்றும், குருவைய்யா காலை, கைகை கட்டிவிட்டார் என்றும், மற்றவர்களுடன் இருந்துவிட்டு ஆட்களைப் பார்த்ததும் ஓடிவிட்டார்கள் என்றும், தன்னை ஆம்புலன்சில் வைத்து மருத்துவமனையில் சேர்த்தார்கள் என்றும், காயத்தின் தன்மை அதிகமாக இருந்ததால் மேல்சிகிச்சைக்காக மதுரை அரசு மருத்துவமனைக்கு கொண்டுபோய் சேர்த்தார்கள் என்றும், தான் மருத்துவமனையில் இருந்ததால் தன் மகன் புகார் வாக்குமூலம் கொடுத்துள்ளார் என்றும், தன்னிடம் காட்டப்படும் பெரியஅரிவாளைக் கொண்டு லிங்கப்பன் கழுத்தை அறுத்தார் என்றும், அது சா.பொ.1 தன்னிடம் காட்டப்படும் சிறிய அரிவாளைக் கொண்டு யார் தாக்கினார்கள் என்றால் ஞாபகமில்லை என்றும், போலீசார் அவரை விசாரித்தார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

**7.3.** அ.சா.3ஆக காயப்பட்ட அ.சா.2ன் மனைவி லட்சுமி அவரது சாட்சியத்தில், தான் சீல்நாயக்கன்பட்டியில் குடியிருக்கிறார் என்றும், ஆஜர் எதிரிகளைத் தெரியும் என்றும், சுமார் 8 ஆண்டுகளுக்கு முன்னர், தங்கள் காட்டிற்கு மேற்கில் உள்ள பெரும்பாதை ஓடை, பெருமாள் காட்டிற்குள் காலை 6 மணிக்கு தனது கணவர் கழுத்து அறுபட்ட

நிலையிலும், கை மற்றும் கால்களும் கட்டப்பட்ட நிலையில் கிடந்தார் என்றும், பின்னர் தன் கணவரை உசிலம்பட்டி மருத்துவமனைக்கும், பின்னர் மதுரை அரசு ராசாசி மருத்துவமனைக்கும் கொண்டு சென்றார்கள் என்றும், போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும், சாட்சியமளித்துள்ளார்.

**7.4.** அ.சா.4 ராசாத்தி அவரது சாட்சியத்தில் எதிரிகளைத் தெரியும், வழக்கு சம்பவம் பற்றி தெரியாது என்றும், போலீசார் அவரை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**7.5.** அ.சா.5 கருப்பையா அவரது சாட்சியத்தில், அவர் சீல்நாயக்கன்பட்டியில் குடியிருந்து வருகிறார் என்றும், வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரிகளைத் தெரியும் என்றும், சுமார் 7 ஆண்டுகளுக்கு முன்னர் 6.30 மணிக்கு தங்கள் ஊரில் உள்ள முருகன் பலசரக்கு கடைக்கு போனார் என்றும், அந்தநேரம் கடையிலிருந்து மாமா தங்கமுடி வெளியே வந்தார் என்றும், அப்போது தங்கமுடி அவரது சம்பந்தகாரைச் சொல்லிவை, இல்லையென்றால் கழுத்தை அறுத்துவிடுவேன் என்று சொன்னார், போலீசார் அவரை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார்.

**7.6** அ.சா.6 முருகன், அ.சா.7 மகாலட்சுமி, அ.சா.8 அழகுமலை, அ.சா.9 தவமணி ஆகியோர் சம்பவம் பற்றித் தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்கள்.

**7.7** அ.சா.10 அழகுராஜா, அ.சா.11 வீரபுத்திரன் ஆகியோர் அவர்களது சாட்சியத்தில், அவர்கள் தற்போது சீல்நாயக்கன்பட்டியில் குடியிருந்து வருகிறார் என்றும், ஆஜர் எதிரிகளைத் தெரியும் என்றும்,

அவர்களிடம் காட்டப்படும் பார்வை மகசர் மற்றும் அத்தாட்சியில் உள்ள கையெழுத்து அவர்களுடையது தான் என்றும், சம்பவத்தைப் பார்த்ததற்காக போலீசார் கையெழுத்து கேட்டதால் கையெழுத்து போட்டார்கள் என்றும், அவர்களுடன் கையெழுத்து செய்த நபரை ஞாபகமில்லை என்றும், போலீசார் அவர்களை விசாரித்தார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார்கள்.

**7.8** அ.சா.12 டாக்டர் குமார் அவரது சாட்சியத்தில், அவர் தற்போது உசிலம்பட்டி தலைமை மருத்துவமனையில் எலும்பு மூட்டு பிரிவில் தலைமை மருத்துவராக பணிபுரிகிறார் என்றும், 11.12.2015ம் தேதி காலை 9.00 மணியளவில் பணியில் இருந்தபோது 55 வயது மதிக்கத்தக்க சீனி என்பவர் அவரைத் தெரிந்த 8 நபர்கள் அருவாள் மற்றும் கத்தியால் அதிகாலை 2.00 மணியளவில் அவரைத் தாக்கியதாக கூறினார் என்றும், அவரைப் பரிசோதித்தபோது அவரின் கழுத்தில் முன்பகுதியில் 10 x 3 x 3 செமீ அளவில் ஒரு சிதைந்த காயம் இருந்தது என்றும், அதன் ஆழம் மூச்சுக்குழாய் தெரியும் அளவில் இருந்தது என்றும், அதிலிருந்து ரத்தம் கசிந்து கொண்டு இருந்தது என்றும், அவர் மேல்சிகிச்சைக்காக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார் என்றும், அங்கு அவர் 11.12.2015 முதல் 23.12.2015 வரை உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டார் என்றும், அங்கு அவரைப் பரிசோதித்த காது, மூக்கு, தொண்டை நிபுணர் அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என கருத்து தெரிவித்தார் என்றும், அதனடிப்படையில் தான் அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என சான்று வழங்கினார் என்றும், அந்த காயச்சான்று அ.சா.ஆ.2 என்றும், அவரைப் போலீசார்

விசாரித்தனர் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**7.9** அ.சா.13 இளவரசு காவல் ஆய்வாளர் அவரது சாட்சியத்தில், அவர் தற்போது மதுரை மாவட்டம், எழுமலை காவல் வட்ட ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறார் என்றும், நிலையத்தில் பதிவு செய்த கு.எண்.219/2015 இதச பிரிவுகள் 147, 148, 294(பி), 323, 324, 342, 307ன் கீழான கோப்பினை பார்வையிட்டு சாட்சியம் அளிக்கிறார் என்றும், கடந்த 11.12.2015ம் தேதி இவ்வழக்கின் வாதி முருகன் என்பவர் தனது தந்தையான சீனி என்பவருக்கு உதவியாக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் இருந்தபோது சார்பு ஆய்வாளர் மாயாண்டி என்பவர் புகார் வாக்குமூலத்தைப் பெற்று நிலையத்திற்கு 12.30 மணிக்கு வந்து நிலைய கு.எண்.219/2015 இதச பிரிவுகள் 147, 148, 294(பி), 323, 324, 342, 307ன் கீழ் வழக்கு பதிவு செய்து, ஆய்வாளர் பார்வைக்கு வைத்து, அ.சா.ஆ.2 முதல் தகவல் அறிக்கை தயார் செய்தார் என்றும், இவ்வழக்கினை காவல் ஆய்வாளர் சிவக்குமார் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடத்திற்கு 13.15 மணிக்கு சென்று சாட்சிகள் அழகுராஜா, வீரபுத்திரன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு அ.சா.ஆ.4 பார்வை மகசர் மற்றும் அ.சா.ஆ.5 வரைபடம் தயார் செய்துள்ளார் என்றும், அதே சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தில் கிடந்த அரிவாள் – 2, நெற்றி லைட் – 1, பாராகான் செருப்பு ஒரு ஜோடி, ரத்தக்கறை படிந்த பச்சை கலர் கட்டம் போட்ட கிழிந்த நிலையில் 4 துண்டுகள், ரத்தக்கறை படியாத மண் ஆகியவற்றை 14.30 மணிக்கு அ.சா.ஆ.6 அத்தாட்சியில் கைப்பற்றியுள்ளார் என்றும், சாட்சிகள் முருகன், சீனி, ராசாத்தி, லட்சுமி, கருப்பையா, தவமணி,

முருகன், ஈஸ்வரன், அழகுராஜா, வீரபத்திரன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்துள்ளார் என்றும், மேலும் மகாலட்சுமி, அழகுமலை ஆகியோர்களை விசாரித்து இவ்வழக்கில் எதிரியாக உள்ள தவசி என்பவரை நீக்கம் செய்து அறிக்கை சமர்ப்பித்துள்ளார் என்றும், எதிரிகளான விஜயலட்சுமி, செல்வி ஆகியோர்களை 11.12.2015 அன்று கைது செய்து தக்க வழி காவல் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார் என்றும், கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்களை அ.சா.ஆ.7 படிவம் 91ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார் என்றும், சுமார் 42 செமீ நீளமுள்ள அருவாள் சா.பொ.2, நெற்றி லைட் 1 சா.பொ.3, பாராகான் செருப்பு ஒரு ஜோடி சா.பொ.4, ரத்தக்கறை படிந்த பச்சை கலர் கட்டம்போட்ட கிழிந்த நிலையில் 4 துண்டுகள் சா.பொ.5, ரத்தக்கறை படிந்த மண் சா.பொ.6, ரத்தக்கறை படியாத மண் சா.பொ.7 என்று சார்பு ஆய்வாளர் மாயாண்டியை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், அதன்பின்னர் வழக்கினை புலன்விசாரணை செய்த காவல் ஆய்வாளர் செல்வம் என்பவர் காயம்பட்டவருக்கு முதலுதவி சிகிச்சையளித்த மருத்துவர் குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலும் பதிவு செய்துள்ளார் என்றும், மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனை மருத்துவர் சிவசுப்பிரமணியத்தை விசாரித்து காயச்சான்று பெற்றுள்ளார் என்றும், பின்னர் சாட்சிகள் மருத்துவர் சிவசுப்பிரமணியம், சார்பு ஆய்வாளர் மாயாண்டி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், பின்னர் புலன்விசாரணை முடித்து எதிரிகள் மீது இதச பிரிவுகள் 147, 148, 294(பி), 323, 324, 342, 307ன்கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும்

சாட்சியம் அளித்துள்ளார்.

**8.** எதிரிகளுக்கு எதிரான சாட்சியங்களைத் தொகுத்து எதிரிகளிடம் கு.வி.மு.ச.பிரிவு.313(1)(ஆ) பிரிவின்கீழ் வினவியபோது, எதிரிகள் அதனை பொய் சாட்சியம் என்று மறுத்தனர். எதிரிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை.

**9.** இவ்வழக்கில் அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.13 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. சான்றுபொருட்கள் சா.பொ.1 முதல் சா.பொ.7 வரையிலானவைத் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. எதிரிகள் தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணம் இல்லை.

**10.** இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிருபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா என்பதேயாகும்.

**11. பரிசீலனை:-**

**11.1.** முதலாவதாக, வழக்கின் எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளான இதச பிரிவுகள் 147, 148, 294(பி), 323, 324, 342, 307-ன்படி குற்றச்சாட்டுகள் நிரூபணம் செய்யும் விதமாக அரசு தரப்பில் மொத்தம் 17 சாட்சிகள் பட்டியலிடப்பட்டு இந்நீதிமன்றத்தில் 13 சாட்சிகள் முன்னிலையாகி சாட்சியம் அளித்துள்ளார்கள். இவ்வழக்கின் எதிரிகளின் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டானது, சாட்சி 2ன் மகளான சாட்சி 3யை 6வது எதிரியானவர் காதல் திருமணம் செய்ததில்

முன்விரோதமாக கொண்டு கடந்த 11.12.2015ம் தேதி எதிரிகள் அனைவரும் சேர்ந்து சாட்சி 2அடித்து வாயில் துணியை வைத்து அமுக்கி, அசிங்கமான வார்த்தைகளால் பேசி, அரிவாளால் கழுத்தை அறுத்து கொடுங்காயத்தை ஏற்படுத்தி, உருட்டுக்கட்டையால் தலை மற்றும் உடம்பில் மாறி மாறி அடித்து, காலால் உதைத்து ஊமைக்காயத்தை ஏற்படுத்தியதாக எதிரிகள் மீது இதச பிரிவுகள் 147, 148, 294(பி), 323, 324, 342, 307 –ன்படி எழுமலை காவல் ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

**11.2.** அ.சா.1 முதல் அ.சா.3 மற்றும் 5 வரையிலான சாட்சிகள் அவர்களது முதல் விசாரணை சாட்சியத்தில் வழக்கு சம்பவம் பற்றியும், சம்பவத்தில் சாட்சி 2ற்கு ஏற்பட்ட காயம் பற்றியும், காயம்பட்ட நபரான சாட்சி 2ற்கு அளித்த சிகிச்சை பற்றியும், புகார் பற்றியும் சாட்சியம் அளித்துள்ளார்.

**11.2.** அவர்களை எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்த போது அ.சா.1 முருகன் அவரது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் சம்பவம் இரவில் நடந்ததால் யார் அடித்தார்கள் என்ற விபரம் தெரியாது என்றால் சரிதான். ஆஜர் எதிரிகளை யார் என்று தெரியாது. யாரையும் பார்க்கவில்லை என்றால் சரிதான். போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க கையெழுத்து செய்துவிட்டு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். கையெழுத்து மட்டும் போட்டேன் என்று முதல் விசாரணை சாட்சியத்திற்கு முரண்பட்டு சாட்சியமளித்துள்ளார்.

**11.3** அதேபோல் அ.சா.2, 3 மற்றும் 5 சாட்சிகளும் அ.சா.1ன் குறுக்கு விசாரணை சாட்சியத்தை ஒத்துரைத்து அவர்களது முதல்

விசாரணை சாட்சியத்திற்கு முரண்பட்டு சாட்சியமளித்துள்ளார்கள். மேலும் சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சியான அ.சா.4 ராசாத்தி சம்பவம் பற்றி தெரியாது என சாட்சியமளித்து பிறழ்சாட்சியாகியுள்ளார்.

**11.4** மேலும், சம்பவம் பற்றி கேள்விப்பட்ட சாட்சியான முருகன் அ.சா.6ஆகவும், 7வது எதிரி ஊரில் இருந்தது பற்றி கூறிய மகாலட்சுமி அ.சா.7ஆகவும், அழகுமலை அ.சா.8ஆகவும், சாட்சி 2யை மருத்துவனைக்கு கொண்டு சென்றபோது சாட்சி 1ற்கு உதவியாக இருந்த தவமணி அ.சா.9ஆகவும் சாட்சியமளித்துள்ளார்கள். அவர்களது முதல் விசாரணை சாட்சியத்தில் சம்பவம் பற்றி தெரியாது என சாட்சியமளித்து பிறழ் சாட்சியாகியுள்ளார்கள். மேலும், பார்வை மகசர் மற்றும் அத்தாட்சியில் கையொப்பம் செய்த அ.சா.10 அழகுராஜா, அ.சா.11 வீரபுத்திரன் ஆகியோர் போலீசார் கேட்டதால் கையெழுத்து போட்டேன் என்று சாட்சிமளித்துள்ளார்கள்.

**11.5.** முக்கிய சாட்சிகள் பிறழ்சாட்சியாக மாறியதால் மட்டும் எதிரிக்கு விடுதலை அளிக்க முடியாது என்ற போதிலும் இந்த வழக்கில் சம்பவத்தை உறுதி செய்யும் விதமாக மற்றச் சாட்சிகளும் சாட்சியம் அளிக்கவில்லை. இவ்வழக்கில் அ.சா.1 முதல் அ.சா.11 வரையிலானவர்கள் சம்பவம் குறித்தும், சம்பவத்தில் ஏற்பட்ட காயம் குறித்தும் அரசு தரப்பில் தெளிவுபடுத்தி சாட்சியம் அளிக்க தவறியதால் அ.சா.12 அரசு மருத்துவர் மற்றும் அ.சா.13 காவல் வட்ட ஆய்வாளர் சாட்சியத்தை மட்டுமே கருத்தில் கொண்டு எதிரிகளின் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டதாக எடுக்க முடியாது. காயம்பட்ட நபர் மற்றும் கண்ணுற்ற சாட்சிகள் பிறழ்சாட்சியாக மாறியுள்ள

நிலையில் விசாரணை அதிகாரி மற்றும் மருத்துவரின் சாட்சியம் மட்டும் வைத்து சம்பவத்தை உறுதிபடுத்தும் சாட்சிகள் இன்றி சந்தேகத்திற்கு இடமின்றி எதிரிகள் மீதான அரசு தரப்பு வழக்கு நிரூபிக்கப்பட்டதாக கொள்வது சட்ட நீதிக்கு முரணானதாக அமையும் என இந்நீதிமன்றம் கருதுகிறது. சந்தேகத்தின் பலன் எதிரிக்கு அளிக்க வேண்டும் என்பது தான் தீர்மானிக்கப்பட்ட சட்டமாக உள்ளது. இந்த வழக்கில் முக்கிய சாட்சிகளும், மற்ற சாட்சிகள் யாரும் அரசு தரப்பு வழக்கை உறுதிசெய்து சாட்சியம் அளிக்கவில்லை. எனவே, சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்குவது தான் நீதியின் நலனுக்கு உகந்ததாக அமையும்.

**12.** எனவே, 1வது எதிரி மீதான இதச பிரிவுகள் 147, 148, 342–ன்படியும், 2வது எதிரி மீதான இதச பிரிவுகள் 147, 148, 294(b), 342, 307–ன்படியும், 3, 5 முதல் 8 மற்றும் 10, 11 எதிரிகள் மீதான இதச பிரிவுகள் 147, 148, 342, 323–ன் கீழான குற்றச்சாட்டைப் பொறுத்து அரசு தரப்பில் எவ்வித அடிப்படை சாட்சியமும், முகாந்திரமும் சொல்லப்படவில்லை என்பதைப் பார்க்கும் போது 1 முதல் 3, 5 முதல் 8 மற்றும் 10, 11 எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் எவ்வித ஐயத்திற்கும் இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

முடிவாக, 1வது எதிரி மீதான இதச பிரிவுகள் 147, 148, 342–ன்படியும், 2வது எதிரி மீதான இதச பிரிவுகள் 147, 148, 294(b), 342, 307–ன்படியும், 3, 5 முதல் 8 மற்றும் 10, 11 எதிரிகள் மீதான இதச பிரிவுகள் 147, 148, 342, 323–ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் எவ்வித ஐயத்திற்கும் இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று தீர்மானித்து,

சந்தேகத்தின் பலனை 1 முதல் 3, 5 முதல் 8 மற்றும் 10, 11 எதிரிகளுக்கு வழங்கி மேற்கண்ட பிரிவுகளின் கீழ் குற்றவாளிகள் அல்ல என தீர்மானித்து 1 முதல் 3, 5 முதல் 8 மற்றும் 10, 11 எதிரிகளைக் கு.வி.மு.ச.பிரிவு 235(1)–ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்படுகிறது.

ஆர்.பி.ஆர்.எண்.25/2023–ல் கைப்பற்றப்பட்ட பெரிய அருவாள் சா.பொ.1, சுமார் 42 செமீ நீளமுள்ள அருவாள் சா.பொ.2, நெற்றி லைட் 1 சா.பொ.3, பாராகான் செருப்பு ஒரு ஜோடி சா.பொ.4, ரத்தக்கறை படிந்த பச்சை கலர் கட்டம்போட்ட கிழிந்த நிலையில் 4 துண்டுகள் சா.பொ.5, ரத்தக்கறை படிந்த மண் சா.பொ.6, ரத்தக்கறை படியாத மண் சா.பொ.7 பயனற்றது என்பதால் மேல்முறையீடு காலத்திற்கு பிறகு அழிக்க உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2026–ம் ஆண்டு ஜீலை திங்கள் 16–ம் நாளான இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

L MAHESWARI
Digitally signed by L MAHESWARI
Date: 2026.07.16 13:34:00 +0530

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.

**அரசு தரப்பு சாட்சிகள்:–**

அ.சா.1 முருகன்
அ.சா.2 சீனி
அ.சா.3 லட்சுமி
அ.சா.4 ராஜாத்தி
அ.சா.5 கருப்பையா

அ.சா.6 முருகன்
அ.சா.7 மகாலட்சுமி
அ.சா.8 அழகுமலை
அ.சா.9 தவமணி
அ.சா.10 அழகுராஜா
அ.சா.11 வீரபுத்திரன்
அ.சா.12 டாக்டர். குமார்
அ.சா.13 இளவரசு (காவல் ஆய்வாளர்)

**அரசு தரப்பு சான்றாவணங்கள்:–**

அ.சா.ஆ.1 புகார் மனு வாக்குமூலம்
அ.சா.ஆ.2 காயச்சான்று
அ.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கை
அ.சா.ஆ.4 பார்வை மகசர்
அ.சா.ஆ.5 மாதிரி வரைபடம்
அ.சா.ஆ.6 அத்தாட்சி
அ.சா.ஆ.7 படிவம் 91

**அரசு தரப்பு சான்று பொருட்கள் :–**

சா.பொ.1 பெரிய அருவாள்
சா.பொ.2 சுமார் 42 செமீ நீளமுள்ள அருவாள்
சா.பொ.3 நெற்றி லைட் 1
சா.பொ.4 பாராகான் செருப்பு ஒரு ஜோடி
சா.பொ.5 ரத்தக்கறை படிந்த பச்சை கலர் கட்டம்போட்ட கிழிந்த நிலையில் 4 துண்டுகள்
சா.பொ.6 ரத்தக்கறை படிந்த மண்
சா.பொ.7 ரத்தக்கறை படியாத மண்

**எதிரிகள் தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:–**

––– இல்லை –––

L MAHESWARI
Digitally signed by L MAHESWARI
Date: 2026.07.16 13:34:08 +0530

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.

**<u>இணைப்பு :–</u>**

1) இவ்வழக்கு விசாரணையின் பொழுது, எதிரிகள் பிணையில் இருந்தார்கள்.

2) சாட்சிகள் எவரும் மூன்று தினங்களுக்கு மேல் விசாரிக்கப்படவில்லை.

3) தீர்ப்பு பற்றி காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி.

அமர்வு வழக்கு எண். 21/2018

சீரான / வரைவு / தீர்ப்புரை

நாள்:-16.07.2026